இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

2002 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

(2002, யூன் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

2002, யூன் மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

2002 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க.
உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ– ஒ 18/2002
4687

2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க. உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க. உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.

சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க. உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஏ) 2002 மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் எழுகின்றதான மூலதன வருவாய் ; ".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பின்வருவனவற்றிலிருந்து எழுகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பின்வருவனவற்றிலிருந்து 2002 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் எழுகின்ற" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. 2001 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக் கத்தின் 8 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (அ) என்னும்பந்தியில் "இலாபங்களும் வருமானமும்;" என்னும் சொற்களுக் குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"இலாபங்களும் வருமானமும் :

ஆயின் எவ்வாறாயினும், (ix), (xi), (xv), (xvii), (xx), (xxi), (xxxix), (li), (liv), (lxiv), (lxv), (lxvi), (lxxii), (lxxiii) மற்றும் (lxxiv) என்னும் உட்பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆட்கள் குழுவொன்றின் விடயத்தில் தவிர, இப் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வேறேதேனும் ஆட்கள் குழுவின் இலாபங்களினதும் வருமானங்களினதும் வருமான வரியிலிருந்தான விலக்களிப்பானது, எந்த வட்டி அல்லது பங்கிலாபங்கள் தொடர்பில் முறையே 61அ என்னும் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் அல்லது 122அ என்னும் பிரிவின்கீழ் வரியானது, கழிக்கப்பட்டுள்ளதோ அந்த வட்டி அல்லது பங்கிலாபங்களைக் கொண்டுள்ளதான அந்த ஆட்கள் குழுவின் அத்தகைய ஏதேனும் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் நீடிக்கப்படலாகாது ; ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தனியாளுக்குக் கொடுக்கற்பாலதான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தனியாளுக்கு 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் கொடுக்கற்பாலதான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :

"(உஉ) இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டதும் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் குறிக்கப்பட்டுள்ளதுமான புனர்நிர்மாண முறிகளில், முதலீடு செய்யப்பட்ட பணங்கள் மீது எவரேனும் ஆளுக்குத் திரளும் வட்டியும் ; ".

"(உஉஉ) இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்டதும் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் குறிக்கப்பட்டதுமான இலங்கை அபிவிருத்தி முறிகளில் 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதி அல்லது அதற்குப் பின்னர் முதலீடு செய்யப்பட்ட பணங்கள்மீது எவரேனும் ஆளுக்குத் திரளும் வட்டியும் ; ".

(3) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "ஏதேனும் வரி ஒதுக்கீட்டுச் சான்றிதழின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்ட ஏதேனும் வரி ஒதுக்கீட்டுச் சான்றிதழின்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், "திரளும் வட்டி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் திரளும் வட்டி" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "இச்சட்டத்தின் 18, 19, 20 அல்லது 21 ஆம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "இச்சட்டத்தின் 18, 18அ, 19, 20, 20அ, 21, 21அ அல்லது 21ஆ" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "முதல் ஐயாயிரம் ரூபாக்கள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முதல் ஐயாயிரம் ரூபா;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :

"(ஈ) 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில், 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் கொடுக்கல் வாங்கலிலிருந்து எழுகின்றதான எவரேனும் ஆளின் மூலதன வருவாய்களின் கூட்டு மொத்தத் தொகை.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, "2000 ஏப்பிறல் 1 ஆம் தேதின்று அல்லது அதன் பின்னர் அவ்வியாபாரத்தைக் கொண்டுநடாத்தத் தொடங்கியதுமான" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2000 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் அவ்வியாபாரத்தைக் கொண்டு நடாத்தத் தொடங்கியதுமான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "தொழிலை 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "வியாபாரத்தை 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "2000 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் வியாபாரத்தைக் கொண்டுநடாத்தத் தொடங்கிய" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2000 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தத் தொடங்கிய" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "2000 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2000 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21அ மற்றும் 21ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 21அ மற்றும் 21ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"குறித்த சில கமத்தொழில் மற்றும் கைத்தொழில் கருத்திட்டங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

21அ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதும், 2002 ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய கம்பெனியால் கொண்டுநடாத்தப்பட்டதுமான, ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்தான, 3ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள்ளான ஏதேனும் கம்பெனியின் இலாபங்களும் வருமானமும் (மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து ஏதேனும் இலாபங்களையும், வருமானத்தையும் தவிர) பொறுப்புமுயற்சி, வர்த்தகச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தத் தொடங்குகின்ற, வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து கணிப்பிடப்படும் மூன்று வருட காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கம்பெனி ஒன்று தொடர்பில், "குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சி" என்பது அத்தகைய கம்பெனியால் கொண்டுநடாத்தப்படுவதும் —

(அ) கமத்தொழில், உணவு பதனிடல், கைத்தொழில் மற்றும் இயந்திரக்கருவி தயாரிப்பு, தகவல் தொழிநுட்பமும் அதனையொத்த சேவைகளும், இலத்திரனியல் அல்லது பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி ;

(ஆ) வேறேதேனும் பெயர்குறிக்கப்பட்ட கருத்திட்டம் அல்லது முதலீடானது ஐநூறு மில்லியன் ரூபாவிலும் அதிகமாயுள்ளதும் விதித்துரைக்கப்பட்ட நெறியுறுத்தல்களுடன் இணங்கியொழுகுவதுமான கருத்திட்டமொன்று,

என்பவற்றில் ஈடுபட்டுள்ளதுமான பொறுப்பு முயற்சி ஒன்று எனப் பொருள்படும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக —

(i) "கமத்தொழில்" என்பது, ஏதேனும் விவரணத்தின்மீதான தாவரங்களைக் கொண்டு காணியில் பயிர்செய்வதும் மீன் வளர்ப்பதும் எனப் பொருள்படும்;

(ii) "பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள்" என்பது, இச்சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பண்டங்கள் தவிர்ந்த ஏதேனும் பண்டங்களின் ஏற்றுமதி எனப் பொருள்படும்.

உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்திக்கான குறித்தசில பொறுப்பு முயற்சிகளை வருமானவரியிலிருந்து விலக்களித்தல்.

21ஆ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சியிலிருந்து 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குள்ளான ஏதேனும் கம்பெனியின் இலாபங்களும் வருமானமும், (மூலதனச் சொத்துக்களின் விற்பனைகளிலிருந்தான ஏதேனும் இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) அத்தகைய பொறுப்பு முயற்சியில், அத்தகைய கம்பெனியினால் செய்யப்பட்ட முதலீட்டுத் தொகையானது, ஆயிரத்து இருநூற்றமைப்பது மில்லியன் ரூபாவிலும் குறைவாக விராதிருப்பின், அமைச்சரினால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும், பத்தாண்டுகளுக்கு மேற்படாததுமான காலப்பகுதி ஒன்றுக்கு, வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்; அத்தகைய காலப்பகுதியானது, பொறுப்பு முயற்சியானது வர்த்தகச் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்தத் தொடங்கிய வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகக் கம்பெனி ஒன்று தொடர்பில், "குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சி" என்பது, 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய கம்பெனியால் கொண்டு

நடாத்தப்படுவதும், தேசிய பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான உள்ளகக் கட்டமைப்பு தொடர்பிலான செயற்பாடொன்றில் ஈடுபட்டுள்ளதுமான, ஒரு பொறுப்புமுயற்சி எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 22அ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யும் எவரேனும் ஆளின் இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் விலக்களிப்பு வழங்கப்படாமை.

22அ. இச்சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும் 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யும் எவரேனும் ஆளின் 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் 2003 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதலாகாது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "அல்லது உட்பந்தி (iii) இல்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "அல்லது உட்பந்தி (iii) இல் அல்லது உட்பந்தி (vi) இல்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (v) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலம் :—

"(vi) 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதும், அவரால் கொண்டு நடாத்தப்பட்ட

அல்லது புரியப்பட்ட ஏதேனும் வர்த்தகத்தில் வியாபாரத்தில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலில் அது பயன்படுத்தப்பட வேண்டியதுமான கணனி வன்ரகத்தைக் கொள்ளுவதற்கான விலையின்மீது நூறு சதவீதத்திலான விடுதொகையொன்று ;"

(3) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "அத்தகைய ஆளினால்" என்பது தொடங்கி "பணத்தொகை" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(இ) அத்தகைய ஆளினால் கொண்டுநடாத்தப்பட்ட ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்தில் அவரினால் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் உற்பத்திசெய்யும் நடைமுறைக்கு அவரது சார்பாக உரிமம் ஒன்றைப் பெறுவதற்கு பிரதிபயனாக அத்தகைய ஆளினால் —

(i) 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவின் பத்தில் ஒன்றுக்கு ;

(ii) 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவின் நாலில் ஒன்றிற்குச்

சமமான பணத்தொகை ஒன்றிற்கு ; "

(4) அவ்வுட்பிரிவில் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(இஇ) அத்தகைய ஆளினால் கொண்டுநடாத்தப்பட்ட ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்தில் அவரினால் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் (நற்கீர்த்தி தவிர்த்து) ஆக்கவுரிமை, பதிப்புரிமை அல்லது வியாபாரச் சின்னம் போன்ற ஏதேனும் தொட்டுணர முடியாச் சொத்தின் கொள்வனவில்

2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவின் நாலில் ஒன்றிற்குச் சமமான ஒரு பணத்தொகை :

ஆயின், முற்போந்த வரிமதிப்பீட்டாண்டுகளில் கழிக்கப்பட்ட மொத்தப் பணத்தொகைகள், அத்தகைய கொடுப்பனவுத் தொகைக்குச் சமமாகவிருப்பின், அத்தகைய ஏதேனும் கொடுப்பனவு தொடர்பில் இப்பந்தியின்கீழ் எவரேனும் ஆளுக்கு கழிப்பனவெதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.";

(5) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "அத்தகைய விடுதொகையானது" என்பது தொடங்கி "சமமான ஒரு தொகை" என்பது வரையான எல்லாச் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் :—

"அத்தகைய விடுதொகையானது —

(i) 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில் அத்தகைய கணனி மென்ரகத்தைக் கொள்வதற்கான விலையின் ஐம்பது சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகை ;

(ii) 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டின் விடயத்தில் அத்தகைய கணனி மென்ரகத்தைக் கொள்ளுவதற்கான விலையின் நூறு சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகை ;

ஆதல் வேண்டும்."

(6) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலமும் :

"ஆயின், வர்த்தக நோக்கங்களுக்காக, வளவுகளை வாடகைக்குவிடும் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் கம்பெனி ஒன்றின் விடயத்தில்,

இவ்வுட்பிரிவின்கீழ் கழிக்கப்படற்பாலதான பணத் தொகையானது, அத்தகைய வளவுகளுக்காக அத்தகைய கம்பெனியால் பெறப்பாலதான முழுமொத்த வாடகையின் –

(i) 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு பத்து வீதத்தை ;

(ii) 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, அத்தகைய சட்டத்தின் திருத்தங்கள் தொடர்பில் இருபத்தைந்து சதத்தை,

விஞ்சுதலாகாது ;";

(7) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில், "உறப்பட்ட செலவு" என்னும் செ்ாற்களுக்குப் பதிலாக, 2000 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்ட செலவினம் ;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(8) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :

"(ஓஓ) அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வர்த்தகத்தை அல்லது வியாபாரத்தை மேம்படுத்துவதற்காக ஏதேனும் விஞ்ஞான, கைத்தொழில் அல்லது கமத்தொழில் அல்லது வேறேதேனும் ஆராய்ச்சியைக் கொண்டுநடாத்துவதில் அத்தகைய ஆளினால் 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்ட மூலதனச் செலவு உட்பட்ட செலவினம் ;";

(9) அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியில், "உறப்பட்ட செலவினம்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :–

"உறப்பட்ட செலவினம் :

ஆயின், எவரேனும் ஆளினால் 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் பயிற்சியின்போது உறப்பட்ட ஏதேனும் செலவினமானது, பயிற்சியின் காலப்பகுதியினைக் கருத்திற்கொள்ளாது கழிக்கப்படற்பாலதாக இருத்தல் வேண்டும்.".

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "உறப்பட்ட செலவினம்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :

"உறப்பட்ட செலவினம் :

ஆயின், இலங்கைக்கு வெளியே பயணஞ் செய்வதால் உறப்பட்ட அத்தகைய செலவினமானது, அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருப்பின் 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவினம் தொடர்பில் கழிப்பனவொன்று அனுமதிக்கப்படலாம்.";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் (ii) ஆம் உட்பந்தியில் "உறப்பட்ட ஏதேனும் செலவினம்" என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் :—

"உறப்பட்ட ஏதேனும் செலவினம் :

ஆயின், இலங்கைக்கு வெளியே பயணஞ் செய்வதனால் உறப்பட்ட அத்தகைய செலவினமானது, அத்தகைய வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருப்பின், 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில், அத்தைகய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் அத்தகை செலவினம் தொடர்பில் கழிப்பனவொன்று அனுமதிக்கப்படலாம் ;";

(இ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், "உறப்பட்ட விருந்துபசாரச் செலவுகள்;" என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :

"உறப்பட்ட விருந்துபசாரச் செலவுகள் :

ஆயின், அவ்வாறு உறப்பட்ட அச்செலவு, அத்தகைய ஆளினால் கொண்டுநடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருப்பின், 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளினால் அல்லது அவர் சார்பில் உறப்பட்ட அத்தகைய செலவினம் தொடர்பில் கழிப்பனவொன்று அனுமதிக்கப்படலாம் ;"

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "அவரது நிறைவேற்று அலுவலருக்குக் கொடுக்கப்பட்ட", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அவரது நிறைவேற்று அலுவலருக்குக் கொடுக்கப்பட்ட" என்னுஞ் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அதன் (3) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(4) எவரேனும் ஆளினால் கொண்டுநடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்தான அத்தகைய ஆளின் நியதிச் சட்டவருமானத்தைக் கணிப்பதில், எந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய செலவினம் உறப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவில் இருந்து மூன்று ஆண்டுகளினுள், அத்தகைய செலவினத் தொகை செலுத்தப்பட்டிருந்தாலேயொழிய ஏதேனும் செலவினம் தொடர்பில் 23 ஆம் அல்லது 24 ஆம் பிரிவின்கீழ் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப்பின்னர் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) (கம்பெனி தவிர்ந்த) ஆளொருவரின், 2002ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வரிமதிப்பிடற்குரியதான வருமானமானது (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும், இப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கழிப்பனவுகளுக்கு அமைவாக, பின்வருவன தவிர்ந்த அவரது மொத்த நியதிச் சட்ட வருமானமாதல் வேண்டும் :—

(அ) எந்த வட்டியிலிருந்து 122(அ) என்னும் பிரிவின்கீழ் வருமான வரியானது கழிக்கப்பட்டுள்ளதோ, அந்த வட்டியிலிருந்தான நியதிச் சட்டவருமானம் ; அத்துடன்

"(ஆ) பங்கிலாபத்தைப் பகிர்ந்தளித்த அத்தகைய கம்பனியிடமிருந்து நேரடியாக அல்லது வேறு ஏதேனும் கம்பனியினூடாகப் பெறப்பட்ட எந்தப் பங்கிலாபத்திலிருந்து 61 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின்கீழ் வருமான வரியானது கழிக்கப்பட்டுள்ளதோ, அந்தப் பங்கிலாபத்திலிருந்தான நியதிச் சட்ட வருமானம்,

ஆயின், எவ்வாறாயினும் விடயத்துக்கேற்ப, எந்த வட்டி அல்லது பங்கிலாபங்களில் இருந்து 122அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 61 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் வருமான வரியானது கழிக்கப்பட்டுள்ளதோ, அத்தகைய வருமானம், விடயத்துக்கேற்ப, ஆளொருவரினால் அவரது வர்த்தகத்தை அல்லது வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் நெறிமுறையின்போது, அத்தகைய வர்த்தகத்திலிருந்து அல்லது வியாபாரத்திலிருந்தான ஒரு வரவாகப் பெறப்பட்டிருக்குமிடத்து, வட்டியிலிருந்தான அல்லது பங்கிலாபத்திலிருந்தான அத்தகைய வருமானம், அத்தகைய ஆளின் மொத்த நியதிச் சட்டவருமானத்தின் ஒரு பாகமாக அமைதல் வேண்டும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அவரால் கொடுக்கப்படற்பாலதான", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆளினால் 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் கொடுக்கப்படற்பாலதான" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்னர் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(அஅ) 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்

டிற்கான 23 ஆம் பிரிவின்கீழ் கழிக்கப்படற்பாலதல்லாத ஆண்டுத் தொகை, நில வாடகை, அரசுரிமைப் பணம், அல்லது வட்டி என்ற வகையாக அத்தகைய ஆளினால் கொடுக்கப்பட்ட பணத்தொகைகள் ;

ஆயின்,

(i) இலங்கைக்கு வெளியே உள்ள ஆளொருவரினால், இலங்கைக்கு வெளியே உள்ள வேறோர் ஆளுக்கு வட்டி, ஆண்டுத் தொகை, நில வாடகை அல்லது அரசுரிமைப் பணம் என்ற வகையாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை தொடர்பில் கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது ;

(ii) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, செலுத்தப்பட்ட அத்தகைய எவையேனும் பணத்தொகைகள், அவ்வாண்டுக்கான நியதிச்சட்ட முறையான மொத்த வருமானத்தை விஞ்சுமிடத்து, அந்த விஞ்சு தொகையானது, இப்பிரிவின் நோக்கங்களுக்காக அவ்வாண்டின்போது, ஒரு வியாபாரத்தில் உறப்பட்ட ஒரு நட்டம் என்றாற் போன்ற அதே விதமாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(iii) அத்தகைய ஆளினால் ஏதேனும் பணத்தொகை, ஆண்டுத்தொகை என்ற வகையாக செலுத்தப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய பணத்தொகை தொடர்பில் கழிப்பனவு எதுவும் –

(அ) நீதிமன்றத்தின் கட்டளையொன்றின் கீழ் பிரிமனைக் கொடுப்பனவாக அல்லது தாபரிப்புக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தாலன்றி ;

(ஆ) முறையாக எழுதி நிறைவேற்றப்பட்ட பிரிந்து வாழ்தல் உறுதியொன்றின் கீழ் அவரது வாழ்க்கைத் துணைக்குச் செலுத்தப்பட்டாலன்றி ;

(இ) பணவகையான அல்லது பணப்பெறுமதி வகையான முழுப் பிரதிபயனுக்கெனவும் கைமாறாகச் செலுத்தப்பட்டாலன்றி,

அனுமதிக்கப்படலாகாது.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக "வட்டி" என்ற பதம் வங்கி, நிதி நிறுவனம் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் கடனொன்றின் மீது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் போது செலுத்தப்பட்ட ஏதேனும் வட்டி எனப் பொருள்படும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (அ) எனும் பந்தியினை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும் —

"(அ) (i) 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபா விடுதொகையொன்று ; அல்லது

(ii) 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டு தொடர்பிலும் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா விடுதொகையொன்று.".

(2) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் —

"ஆயினும் மேலும் 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யும் ஆளெவரும், வரிவிதிக்கப்படற்பாலதான அவரது வருமானத்தை ஆய்ந்தறிகையில், அத்தகைய முதலீடு தொடர்பில் செய்யப்பட்ட அல்லது உற்பட்ட ஏதேனும் முதலீட்டின் மீது அல்லது செலவினத்தின்மீது (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஏதேனும் விடுதொகையை கழிப்பனவு செய்வதற்கு உரித்துடையவராதலாகாது.";

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை திருத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், "செவிப்புலப் படைப்பு என்று பொருள்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செவிப் புலப் படைப்பு எனப் பொருள்படும் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத் துப்பின்னர் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஐ) பந்திய (ஒ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட கடன் தவிர்த்து, வேறுவகையில் எவரேனும் ஆளினால் முதலாவதாக அமையும் வீட்டை ஒன்றில் நிருமாணிப்பதில் அல்லது கொள்வனவு செய்வதில் 2001, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் பெறப்பட்ட கடனிலிருந்து, ஒன்றில் முதலாவது வீட்டின் நிருமாணத்தில் அல்லது கொள்வனவில் 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ஒ) எவரேனும் தனியாளினால், முதலாவதாக அமையும் வீட்டை ஒன்றில் நிருமாணிப்பதற்காக அல்லது கொள்வனவு செய்தற்காக 2001, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் பெறப்பட்ட

அங்கீகரிக்கப்பட்ட வீடமைப்புக் கடனை மீளச் செலுத்துவதில் 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்ட ஏதேனும் செலவினம் ;

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, "அங்கீகரிக் கப்பட்ட வீடமைப்புக்கடன்" என்பது, அரசாங் கத்திடமிருந்து அல்லது பணச்சட்டத்தின் கருத் தெல்லைக்குள்ளான ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனத்திடமிருந்து அல்லது ஏதேனும் மாகாணசபை நிதியத்திடமிருந்து அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையிடமிருந்து, அல்லது வீடமைப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப் பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட வீடமைப்புக்கடன் எனப் பொருள்படும்.

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் —

(அ) அப்பந்தியின் (V) ஆம் உட்பந்தியில், "இருபத்தையாயிரம் ரூபாவினை விஞ்சுத லாகாது".; என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவினை விஞ்சுதலா காது ;"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (V) ஆம் பந்தியினை உடனடுத்துப்பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :

"(VI) அந்த வரிமதிப்பீட்டாண்டில் (2) ஆம் உட்பிரிவின் (ஐ), (ஒ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட, அவரால் செய் யப்பட்ட எல்லாத் தகைமைபெறும் கொடுப்பனவுகள், தொடர்பிலும் செய் யப்படும் கழிப்பனவு, அந்த வரிமதிப் பிடற்குரியதான வருமானத்தின் மூன்றி லொன்றை அல்லது ஒரு இலட்சம் ரூபா என்பவற்றில் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகையை விஞ்சுதலாகாது.";

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(6அ) இரண்டாம் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தகைமைபெறும் கொடுப்பனவின் விடுதொகையின் மிகையானது, அத்தகைய செலவினம் எந்த வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் வரி மதிப்பிடற்குரியதான வருமானத்திலிருந்து அது கழிக்கப்படமுடியாதவிடத்து, அத்தகைய செலவினம் எந்த வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்டதோ, அந்த வரிமதிப்பீட்டாண்டினை உடனடுத்துவரும் ஒன்பது ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதி ஒன்றின்மீது பங்கீடு செய்யப்படலாம். அத்துடன் அத்தகைய பங்கீடு செய்யப்பட்ட தொகை, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றிலும் செய்யப்பட்ட தகைமை பெறும் கொடுப்பனவு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் .".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "முதலாம் அட்டவணையில் 1 ஆம் பாகத்தில்" என்னும் சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாக, "முதலாம் அட்டவணையின் 1 ஆம் பாகத்திலும் 1(அ) ஆம் பாகத்திலும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) "முதலாம் அட்டவணையில் III ஆம் பாகத்திலும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "முதலாம் அட்டவணையின் IIIஆம் பாகத்திலும், III(அ) ஆம் பாகத்திலும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "அத்தகைய பணத்தொகையானது" என்னும் சொற்களிலிருந்து அக்காப்பு வாசகத்தின் இறுதிவரை

யிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "அத்தகைய பணத்தொகையானது (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில், அவ்வுட்பிரிவில் 'மூலதன வருவாய்' என்பதற்கான குறிப்பீடுகள், 'அத்தகைய பணத் தொகை' என்பதற்கான குறிப்பீடுகள் என்றாற் போன்று வருமான வரிவிதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்."; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "சொத்தாண்மை மாற்றத்தினால் வரும் மூலதன வருவாயை உள்ளடக்குமிடத்து", என்னும் சொற்களுக்குப் பதிலாக "2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான சொத்தாண்மை மாற்றத்தினால் வரும் மூலதன வருவாயை உள்ளடக்குமிடத்து;"; என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின், "ஆளொருவர் ஏதேனும் ஆதனத்தின் சொத்தாண்மை மாற்றத்தினால் எழுந்துள்ள மூலதன வருவாய் எதனையும் உள்ளடக்குகின்றவிடத்து", என்ற சொற்களுக்குப் பதிலாக "2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக ஆளொருவர் ஏதேனும் சொத்தாண்மை மாற்றத்தினால் எழுந்துள்ள மூலதன வருவாய் எதனையும் உள்ளடக்குமிடத்து", என்னும் சொற்களை இடுவதன் மூலம் ; அத்துடன்

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "ஆளொருவரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஆளொருவரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்", என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40(அ) மற்றும் 40(ஆ) என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் நாற்பதாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்துப் படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 40அ, 40ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

"விசேடத்துவ வீடமைப்பு வங்கிகளுக்கு ஏற்புடைத்தான வருமானவரி வீதம்.

40அ. (1) 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில், விசேடத்துவ வீடமைப்பு வங்கியொன்றின் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், 3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள் அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் உள்ளடக்குகின்றவிடத்து, அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் கொண்டிருக்கக் கூடியவாறான அத்தகைய வரிவிதிக்கப்படற் பாலதான அத்தகைய வருமானத்தின் அத்தகைய பாகமானது, இச்சட்டத்தில் முரணாக உள்ளது. எது எப்படியிருப்பினும், இருபது சதவீதம் என்ற வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "விசேடத்துவ வீடமைப்பு வங்கி" என்பது வதிவிட வீடமைப்புடன் மட்டும் தொடர்புடைய செயற்பாடுகளுக்காக கடன் கொடுப்பதில் ஈடுபடுகின்றதும், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வருகின்றதுமான உரிமம் வழங்கப்பட்டுள்ள வர்த்தக அல்லது விசேடத்துவ வங்கியொன்று எனப் பொருள்படும்.

வரிவிலக்களிப்பு முடிவடைந்த பின்னர், சில கம்பெனிகளுக்கு ஏற்புடைத்தான வருமான வரிவீதம்.

40ஆ. (1) எக்காலப் பகுதியில் அத்தகைய கம்பெனியின் இலாபங்களும் வருமானமும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டனவோ, அக்காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர், தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக, 3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள் வருகின்ற 21ஆ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பெனியின்

இலாபங்களும் வருமானமும், இச்சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும் பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் வருமானவரி விதிக்கப் படற்பாலதாதல் வேண்டும்.

(2) 21அ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள ஏதேனும் கம்பெனியின் 3(அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள் வரும் இலாபங்களும் வருமானமும், இச்சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும் –

(அ) எக்காலப்பகுதியில் அத்தகைய கம்பெனி வருமானவரியிலிருந்து விலக்களிக்கப் பட்டதோ, அக்காலப்பகுதியை உடனடுத்த ஒவ்வொரு இரண்டு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும், பத்து சதவீதம் என்ற வீதத்தில் வரிவிதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர், தொடங்குகின்ற ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் –

(i) கமத்தொழில் அல்லது பாரம் பரியமற்ற உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியில் அத்தகைய கம்பெனி ஈடுபட்டிருந்தால், பதினைந்து சதவீதம் என்ற வீதத்தில் வரிவிதிக்கப்படற்பாலதாதல் வேண்டும் ; அத்துடன்

(ii) கமத்தொழில் அல்லது பாரம் பரியமற்ற உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியில் ஈடுபடுகின்ற கம்பெனியொன்று தவிர்ந்த கம் பெனியொன்றாக இருக்குமிடத்து, அத்தகைய கம்பெனி இருபது சதவீதம் என்ற வீதத்தில் வரிவிதிக் கப்படற்பாலதாதல் வேண்டும்.".

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

குறித்தசில பங்கிலாபங்கள் மீதான வருமானவரி வீதம்.

48அ. ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (கம்பெனியொன்றைத் தவிர்ந்த வேறு) எவரேனும் ஆளின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம், பங்குகள் அல்லது தொகுதிக் கடன்கள் என்ற வகையில் 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபமொன்றை உள்ளடக்குமிடத்து, அத்தகைய பங்கிலாபத்தைக் குறிக்கும் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம் பத்துச் சதவீதம் என்ற வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

23. 2001 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "கொண்டதாயிருத்தல் வேண்டும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் —

"கொண்டதாயிருத்தல் வேண்டும் :

ஆயின், ஒரு கம்பெனியால் 2002, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான வருமானவரி, ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து, அத்தகைய கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சுவதான அத்தொகை, ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சுவதான அத்தகைய கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்திற்கு மேற்படுதலாகாது."

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் ("ஆ") என்னும் பந்தியை உடனடுத்துப்பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :–

"(ஆஆ) 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப் பீட்டாண்டாக இருந்து ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டொன்றுக்கு, அத்தகைய கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் எந்த இலாபங்களின்மீது கணிக்கப்படுகின்றதோ, அந்த இலாபங்களிலிருந்து, அந்த வரிமதிப்பீட்டு ஆண்டில் அத்தகைய கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பங்கிலாபத்தின் கூட்டுமொத்தத் தொகையின் பத்து சதவீதமொன்றிற்குச் சமமான ஒரு தொகையைக் கொண்டதாயிருத்தல் வேண்டும் ";

(4) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "பணத் தொகையையும் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பணத்தொகையையும் :

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்.

ஆயின், 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியானது, ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து, ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சுவதான அத்தொகை, ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சுவதான அத்தகைய கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்துக்கு மேற்படுதலாகாது ; அத்துடன்"; என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு, "ஆளுக்குச் செலுத்தப்படற்பாலதாகின்ற" என்பதிலிருந்து "பதினைந்து சதவீதத்திற்குச் சமமான" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆளுக்கு, 2002 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதன்முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தப்படற்பாலதான (இதனகத்துப் பின்னர் "இயைபான பங்கிலாபம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஏதேனும் பங்கிலாபத்தொகையிலிருந்து ஏதேனும் விலைகோரிப் பெறப்பட்ட பகிரங்கக் கம்பெனியால் 2002 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் பகிர்ந்தளிக்கப்பட்டு அத்தகைய வதிவுள்ள கம்பெனியால் ஒன்றில் நேரடியாக அல்லது இடைநிலைக் கம்பெனியொன்றுக்கூடாக அல்லது பலவற்றுக்கூடாகப் பெறப்பட்டதும், இச்சட்டத்தின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பங்கிலாபமொன்றின் முழுத்தொகையை அல்லது அதன் ஏதேனும் பாகமாக அல்லாதிருப்பதுமான பங்கிலாபமொன்றின் முழுத்தொகையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அத்தகைய இயைபான பங்கிலாபம் கொண்டிருப்பின் அத்தகைய இயைபான பங்கிலாபத்தின் பத்து சதவீதத்துக்குச் சமமான".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(1அ) வதிவுள்ள கம்பெனி ஒவ்வொன்றும், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, அக்கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், எந்த இலாபங்களின்மீது கணிக்கப்படுகின்றதோ, அந்த இலாபங்களிலிருந்து பணமாக அல்லது பணத்தைச் செலுத்தும் கட்டளை ஒன்றின் வடிவில் 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் பங்குதாரர் எவருக்கும் செலுத்தப்படற்பாலதான மொத்த பங்கு இலாபத் தொகையிலிருந்து பத்து சதவீதத்துக்குச் சமமான வருமானவரியைக் கழிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும்;" அத்துடன்,

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "(1) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(1)ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (1அ) ஆம் உட்பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 122அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வங்கி அல்லது நிதி நிறுவனம், செலுத்தப்பட்ட வட்டி மீதான வருமான வரியைக் கழித்தல்.

122அ. (1) வங்கி அல்லது நிதிநிறுவனம் ஒவ்வொன்றும், இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் :

(அ) எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையால் அவரது அல்லது அதனது சொந்தப் பெயரில் அல்லது வேறு எவரேனுமாளின் பெயரில் அல்லது எவரேனும் ஆளின் அல்லது பங்குடை மையின் பெயரின்றி வைப்பிலிடப்பட்ட பணம் ; அத்துடன்

(ஆ) மாதமொன்றுக்கு ஆறாயிரம் ரூபாவுக்கு அல்லது ஆண்டொன்றுக்கு எழுபத்திரண்டாயிரம் ரூபாக்களுக்குக் குறையாது செலுத்தப்படற்பாலதான வட்டி,

ஆகிய ஏதேனும் பணத்தொகைமீது அதனால் செலுத்தப்படற்பாலதான வட்டியிலிருந்து அல்லது அத்தகைய வைப்பின்மீது உழைத்த மொத்த வட்டித் தொகைமீது பத்துவீதம் என்ற வீதத்தில் வருமான வரியை, அதைச் செலுத்தும்போது கழித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள், தரும நிறுவன மொன்றாக ஆணையாளர் தலைமையதிபதியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனமொன்று தொடர்பில் ஏதேனும் வைப்பின்மீது அத்தகைய நிறுவனத்திற்கு மாதமொன்றுக்கு பன்னிரண்டாயிரம் ரூபாவை அல்லது ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபாவை விஞ்சாது திரளும் ஏதேனும் வட்டி மீது ஏற்புடையனவாகா :

ஆயின், ஆள் ஒருவர் அல்லது பங்குடைமை யொன்று அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை யால் வைப்பிலிடப்பட்ட பணத்தொகையொன் றின்மீது, ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆள் அல்லது பங்குடைமைக்கு செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வட்டியி லிருந்து, பத்துசதவீதம் என்ற வீதத்தில் வருமான வரியைக் கழிக்குமாறு வங்கியொன்றுக்கு அல்லது நிதிநிறுவனமொன்றுக்கு கோரிக்கைவிடுக்கு மிடத்து, அப்போது அத்தகைய வங்கி அல்லது நிதிநிறுவனம் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய பணத்தொகைமீது செலுத்தப்படற் பாலதான வட்டி எழுபத்திரண்டு ஆயிரம் ரூபாவைவிடக் குறைவாக இருப்பது எது எப்படி யிருப்பினும், அத்தகைய கோரிக்கையுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் கழிப்பனவு ஒன்றைச் செய்யும் நோக்கங்களுக்காக –

(அ) வைப்புப் பணத்தொகை தொடர்பான "வட்டி" என்பது எந்த ஆளின் அல்லது எவரது பெயரில் பங்குடைமை உள்ளதோ அப்பங்குடைமையின் அல்லது எவர் சார்பாக பணத்தொகை வைப்பிலிடப் பட்டுள்ளதோ அவரின் நன்மைக்கு செலுத் தப்படற்பாலதான அல்லது திரளுகின்ற வட்டி, கழிவு அல்லது வேறு ஏதேனும் தொகையை உள்ளடக்குகின்றது. ஆனால், 10 ஆம் பிரிவின் கீழான விலக்களிக்கப் பட்ட ஏதேனும் வட்டியை அல்லது ஏதேனும் அமைச்சுக்கு, அரசாங்கத் திணைக்களத்திற்கு அல்லது ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு அல்லது மாகாண சபையொன்றின் கீழுள்ள ஏதேனும் நிறுவனத்திற்கு அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலதான வட்டியை உள்ளடக்காது ;

(ஆ) கழிவொன்றின் விடயத்தில், வட்டி, அத்தகைய கழிவு அனுமதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில் செலுத்தப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதியானவர், ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனமொன்று, வரியைக் கழித்தல் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகும் ஒரு வழிமுறையைத் திட்டமிட்டுள்ளதாகத் திருப்திப்படுமிடத்து, அத்தகைய வழிமுறையைப் பயன்படுத்துவதன்மூலம் தவிர்க்கப்பட்ட வரியின் ஐந்நூறு சதவீதத்துக்குச் சமனான தொகையொன்றை, அத்தகைய வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் மீது தண்டமொன்றாக விதிக்கலாம்.

சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, (1) ஆம் உட்பிரிவில், "வருமான வரியை, அதைச் செலுத்தும்போது கழித்தல் வேண்டும் என்பது" ஏதேனும் கணக்குக்கு வரவுவைக்கப்பட்ட ஏதேனும் வட்டித் தொகையை உள்ளடக்குதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவை திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்காக" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 131 ஆம் பிரிவைத் திருத்துதல்.

31. 2001 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 131 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) "குறித்துரைக்கப்பட்ட கட்டணம்" என்னும் வரைவிலக்கணத்தின் (ஆ) என்னும் பந்தியில், "2001 ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2001, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(2) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(இ) 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் என்பது —

(i) மாதமொவ்வொன்றுக்கும் ஐம்பதினாயிரம் ரூபாவை ; அத்துடன்

(ii) வேறு ஏதேனும் விடயத்தில் ஆண்டொன்றுக்கு ஐந்நூறு ஆயிரம் ரூபாவை —

விடக் குறையாதும், விடயத்திற்கேற்ப, எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமையால் சுயேச்சையான ஒரு தன்மையில் கொண்டுநடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் வியாபாரத்தின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் அல்லது வேறு செயற்பாடுகளின் நெறிமுறையின் போது, அவ்வாளினால் அல்லது அப்பங்குடைமையால் ஆற்றப்படும் சேவைகளுக்குப் பிரதிபயனாக, எவரேனுமாளுக்கு அல்லது பங்குடைமைக்கு அந்த வரிமதிப்பீட்டு ஆண்டில் குறித்துரைக்கப்பட்ட ஆளெவராலும் செலுத்தப்படற்பாலதுமான கூட்டுமொத்தமாகத் திரளும் ஏதேனும் பணத்தொகை அல்லது பணத்தொகைகள் எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தரகையும், தரகுக் கூலியையும் அல்லது இதனையொத்த இயல்பினதான வேறு பணத்தொகைகளையும் உள்ளடக்கும். ஆனால், 131ஆ ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறாக, குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காணி அல்லது கட்டடத்தை பயன்படுத்து

வதற்கு அல்லது இருப்பாட்சி செய்வதற்கு ஊழிய நெறியமுறையின்போது, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளின் ஊழியருக்கு அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வாடகை அல்லது வேறு ஏதேனும் செலுத்தப்படற்பாலதான கொடுப்பனவின் ஏதேனும் பணத்தொகையை உள்ளடக்காது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் XVI அ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் XVI ஆம் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் XVIஅ என்னும் அத்தியாயமாக பயனுறுதலும் வேண்டும் :–

"அத்தியாயம் XVIஅ

வதிவு நோக்கங்கள் தவிர்த்து, ஏதேனும் காணியை அல்லது கட்டடத்தைப் பயன்படுத்துவதற்காக அல்லது இருப்பாட்சி செய்வதற்காக, எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையால் செலுத்தப்பட்ட வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவுகளிலிருந்து கிடைக்கும் வருமானவரியைக் கழித்தல்.

வாடகை, குத்தகை வாடகை என்பனவற்றைச் செலுத்தும் ஆட்கள் வருமான வரியைக் கழித்தல்.

131அ. 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் வதிவிடமொன்று தவிர்ந்த, ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட காணியை அல்லது கட்டடத்தைப் பயன்படுத்துவதற்காக அல்லது இருப்பாட்சி செய்வதற்காக ஏதேனும் வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவைச் செலுத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும், அல்லது பங்குடைமை ஒவ்வொன்றும், அத்தகைய வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவின் பத்துசதவீதம் என்ற வீதத்தில் வருமான வரியை அத்தகைய வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவை, கொடுப்பனவின் நேரத்தில் கழித்தல் வேண்டும்.

XV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை, இந்த அத்தியாயத்துக்கு ஏற்புடைத்தாக்கல்.

131ஆ. வங்கிகளாலும் நிதி நிறுவனங்களாலும் செலுத்தப்பட்ட வட்டியிலிருந்தான வருமானவரிக் கழிப்பனவு, அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட வருமானவரிக்கான வரவு, வங்கிகளினதும் நிதி நிறுவனங்களினதும் கடமைகள், வருமானவரிக் கழிப்பனவில் தவனை தவறுகை, வங்கிகள் மீதும் நிதிநிறுவனங்களின் மீதும் வரிமதிப்பீடுகள் வழங்கல், மேன்முறையீடுகள் அத்துடன் தவணை தவறுகைக்கான தண்டம் என்பன தொடர்பில் அத்தியாயம் XV என்பதன் ஏற்பாடுகள் 131.அ என்னும் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறான, அத்தகைய வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவிலிருந்தான வருமானவரிக் கழிப்பனவு, அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட வருமானவரிக்கான வரவு, அத்தகைய வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவைச் செலுத்துவதற்குப் பொறுப்பான ஆட்களின் கடமைகள் வருமானவரிக் கழிப்பனவில் தவணை தவறுகை, அத்தகைய ஆட்களின்மீது வரிமதிப்பீடுகள் வழங்குதல், மேன்முறையீடுகள், இவ்வத்தியாயத்தின்கீழ் தவணைதவறுகைக்கான தண்டம் என்பவற்றுக்கும், அத்தியாயம் XV என்பதில் "வங்கிகளும் நிதிநிறுவனங்களும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, அத்தகைய வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவைச் செலுத்துவதற்கப் பொறுப்பான ஆட்கள்" என்னும் சொற்களும் "வட்டி" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவு" என்னும் சொற்களும் அவை அவ்வத்தியாயத்தில் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் இடப்பட்டாற் போன்றும், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும். ஆயினும், அத்தகைய சொத்தின் எவரேனும் கூட்டுச் சொந்தக்காரர் களுக்கு ஏதேனும் வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவிலிருந்து எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட அவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் கழிப்பனவு செய்யப்பட்ட வருமானவரிக்கான வரவு அத்தகைய சொத்துக்கான அவர்களது சொத்துவத்தின் விகிதாசாரத்தில் அத்தகைய கூட்டுச் சொந்தக்காரர்களுக் கிடையே பகிர்ந்துகொள்ளப்படல் வேண்டும்.

131இ. இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக—

"குறித்துரைக்கப்பட்ட காணி அல்லது கட்டடம்" என்பது ஏதேனும் பஞ்சாங்க மாதத்துக்கு அல்லது அதன் பாகத்துக்கு செலுத்தப்படற்பாலதான வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவின் தொகை ஐம்பதினாயிரம் ரூபாக்களை விடக் குறையாத அல்லது ஏதேனும் ஆண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான கூட்டு மொத்தமாகத்திரளும் வாடகை, குத்தகை வாடகை அல்லது வேறு கொடுப்பனவு ஐந்நூறு ஆயிரம் ரூபாக்களை விடக் குறையாதது எனப் பொருள் படும் ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம் பிரிவைத் திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம் பிரிவு "நிறைவேற்று அலுவலர்" என்பதன் வரைவிலக்கணத்தில் "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இருபதாயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

34. 2001 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அந்த அட்டவணையின் (1) ஆம் பாகத்தில் "பாகம் II இல் குறிப்பீடுசெய்யப்படாத" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக பாகம் II இல் குறிப்பீடு செய்யப்படாத" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்

(2) அவ்வட்டவணையின் பாகம் I ஐ உடனடுத்துப் பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

"பாகம் Iஅ

2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு பாகம் II இல் குறிப்பீடுசெய்யப்படாத தனியாட்கள்

வரிவிதிக்கப்படற்பாலதான
வருமானத்தின் முதல்

1,80,000 ரூபாவுக்கு	10 சதவீதம்
வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 1,80,000 ரூபாவுக்கு	20 சதவீதம்
மிகுதியின் மீதி	35 சதவீதம்

(3) இவ்வட்டவணையின் III ஆம் பாகத்தில் "32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2002, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம்.

(4) அவ்வட்டவணையின் இறுதியில் பின்வருவதை சேர்ப்பதன்மூலம் :—

பாகம் IIIஅ

2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு 32 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஊழியத்திலிருந்து கிடைக்கும் குறித்த சில இலாபங்களுக்கு ஏற்புடையனவான வருமானவரிவீதங்கள் :

முதல் 10,00,000 ரூபாவுக்கு	—	இல்லை
அடுத்த 5,00,000 ரூபாவுக்கு	—	5 சதவீதம்
அடுத்த 5,00,000 ரூபாவுக்கு	—	10 சதவீதம்
மிகுதியின்மீது	—	15 சதவீதம்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "கூறு நம்பிக்கைப்பொறுப்பும் இருவயினொத்த நிதியமும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றிற்கும் கூறு நம்பிக்கைப்பொறுப்பும் இருவயினொத்த நிதியமும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் இறுதியில் பின்வருவதைச் சேர்ப்பதன்மூலமும் :—

"2002 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் கூறு நம்பிக்கைப்பொறுப்பும் இருவயினொத்த நிதியம் உள்ளிட்ட கம்பெனி" —

"கம்பெனி, கூறுநம்பிக்கை அல்லது இருவ்யினொத்த நிதியத்தின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், அவ்வரிமதிப்பீட்டாண்டில் 50,00,000 ரூபாக்களை விஞ்சாதவிடத்து

.... 20 சதவீதம்

"கம்பெனி, கூறுநம்பிக்கை அல்லது இருவயினொத்த நிதியங்களின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், அவ்வரிமதிப்பீட்டாண்டில் 50,00,000 ரூபாக்களை விஞ்சுகின்றவிடத்து

.... 35 சதவீதம்".

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் அட்டவணை, "முற்பணக் கம்பெனி வரிவீதங்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் அட்டவணையைத் திருத்துதல்.

"2000, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால், 2002 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு முற்பணக் கம்பெனி வரிவீதங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும் :—".

37. (1) இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதி தொடக்கம் இச்சட்டம் தொடங்கும் தேதி வரையிலான காலப்பகுதியின் விடயத்திற்கேற்ப, 122அ, 131 அல்லது 131அ என்னும் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வரியைக் கழிப்பனவுசெய்து அத்தகைய வரியை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புகின்ற எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்குடைமை, உரிய அதிகாரத்துடன் செயற்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கழிப்பனவு மற்றும் அனுப்புகை தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் துடர்ச்சியிலிருந்து அவருக்கு அல்லது அதற்கு நட்டோத்திர வாதமும் அளிக்கப்படுகின்றது.

நட்டோத்தரவாதம்.

(2) அதன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக, 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதி தொடக்கம் இச்சட்டம் தொடங்கும் தேதிவரையிலான காலப்பகுதிக்கு 122அ என்னும் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான அத்தகைய வரியைக் கழிப்பனவு செய்ய இயலாததாயிருக்கும் ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம், அத்தகைய வங்கியின் அல்லது நிதி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினாலேயே அத்தகைய வரியைக் கழிப்பனவுசெய்ய இயலாதிருந்ததென ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடையுமிடத்து, இச்சட்டத்தில் சொல்லப்பட்ட ஏற்பாடுகளை மீறவில்லை எனக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

38. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.